# தங்க மலர்







அமரர்

**சின்னத்தம்பி மகேஸ்வரி**

(தங்கம்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

19.01.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் வடமராட்சி
துன்னாலையில் வாழ்ந்து மறைந்த

**எமது குல விளக்கு**

# அமரர்


# திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி (தங்கம்)

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

# 19.01.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எம் வாழ்வின் மூலமாய் நின்று

ஏற்றங்கள் பல தந்த

எமது அன்னையே

நின் பாதார விந்தங்களில்

இம்மலரினைச்

சமர்ப்பித்து வணங்குகின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



தவப்பேறு
04.03.1930

சிவப்பேறு
20.12.2016

அமரர்

# திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி
## (தங்கம்)

### திதி நிர்ணய வெண்பா

சீரனைய தங்கம் மகேஸ்வரி என்பாள்
பாரிழிந்து பரமனடி சார்ந்த நாள் - ஊரறியும்
ஆண்டு துர்முகி மார்கழி தேய்பிறையிற்
பூண்ட ஸப்தமி யெனப் போற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

கற்றவர்க்கு உற்றதொரு மிடியைக் கடிந்துதவி
கசிந்துருகும் அன்பரது துயரைப் போக்கறுத்து
நற்றமிழால் அறிஞருடை நாவில் நடம்புரியும்
நால்வேதப் பொருளான ஓங்கார நாயகனே
வெற்றிபுனை வேழமுகம் தன்னை உடையோனே
வெற்றிக்கு வித்தான விநாயகப் பெருமானே
இற்றரையில் இளையவன் நான் கவிதை பாட
இயல்பாக வருவாயே காப்பும் நீயே.

## தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே!

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரவென் கண் குளிர்ந்தனவே!

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடு தெய்வ தோத்திரம்

## இந்திரன் அம்மன்

அன்னையுந்தன் வாசல்தனில் அன்பாய் ஏகி
ஆவலுடன் அம்மாளாச்சி தாயே என்று
முன்னைவினை முழுவதையும் போக்கி இன்ப
முத்தியினை ஈவாயே என்று சொல்லி
நன்மைவழி நெறியினிலே நாளும் வந்து
நல்லபடி பூசைதிரு விழாவும் செய்து
அன்பொழுகப் பணிந்து நின்ற அன்னை தங்கம்
அருளடியில் இருந்திடவே பேறு ஈவாயே.

## அல்லையம்பதி முருகன்

மூலமுதல் ஈஸ்வரனின் புதல்வன் ஆயும்
முதல்வனுக்கே பொருளீந்த குமரன் ஆனாய்
ஆலயத்தில் மூலமென உறைந்து அருகே
அல்லையம்பதி யமர்ந்த அருளின் பேறே
சீலமுடை திருவிழா வேளை தன்னில்
திடமாக வாசல்வந்து பணிந்து நின்ற
கோலமுயர் சைவநெறி வாழ்வு வாழ்ந்த
சுந்தரியாம் தங்கத்தை அடியில் வைப்பாய்.

## செல்வச்சந்நிதி முருகன்

செல்வமிகு வாழ்வதனை செழிப்பாய் நல்கி
சீரோங்க அனைவரையும் காக்கும் ஐயன்
நல்குரவு வறுமையதை நாளும் ஓட்டி
நலமீந்து அருள்மழையைப் பொழியும் மெய்யன்
அல்லலற அமைதியதை வேண்டி வந்து
அன்னதான பணிகளிலும் இணைந்தாள் அன்னை
வல்லவுந்தன் திருத்தாளில் இடத்தை வைகி
வளமாக வைப்பாயே தங்கம் தன்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுர மாயவன்

மாயவனே உலகனைத்தும் காத்து என்றும்
மண்ணுக்கு ஒளியூட்டி அருளும் கண்ணா
தாயெனவே தயையோடு பார்வை காட்டி
தக்கபடி பேறுதரும் கொடையின் மன்னா
சேயெனவுன் வாசல்தனில் வந்து போற்றி
சிறப்போடு சப்பரத் தன்றன்னம் ஈந்து
வேய்ங்குழலா என்றுன்னை வேண்டி நின்ற
வித்தகியாம் தங்கத்தை விரைவில் ஏற்பாய்.

## மூச்சம்பலம் சிவன்

உலகனைத்தும் ஆடலினால் இயக்கி நன்றே
ஓரொளியாய் பேரொளியாய் நிற்கும் ஈசன்
காலனையும் காலாலே உதைத்து அன்று
காணரிது பக்தியென சொன்ன தாசன்
ஞாலமதில் நீ செய்த விளையாடல் தன்னை
நவின்றிடு நற்புராணமதில் பூசை செய்தாள்
சீலமிகு நின்னடியில் சிவப்பேறு ஈந்தே
சிறப்பாக காப்பாயே தங்கம் தன்னை.

## சோழியவத்தை நரசிம்மர்

ஊரதிலே அமர்ந்தெமக்கு காவல் தந்து
உவப்போடு அருளீயும் ஈசா உந்தன்
பேரதிலே பக்தி வரும் பயமும் சேரும்
பேறெனவே தவவாழ்வு எம்மை நாடும்
நரசிம்மா என்றழைத்தே பொங்கல் செய்து
நல்லபடி படைத்துன்னை பணிந்து நின்றாள்
பெருவாழ்வு அளித்துந்தன் பாதம் தன்னில்
பிரியமுடன் வைப்பாயே தங்கம் தன்னை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அமரர்*

# திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி (தங்கம்)

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

எழில் கொஞ்சும் ஈழவள நாட்டின் சென்னியாகிய யாழ்ப் பாணத்தின் கிழக்குப் பாகமான வடமராட்சியில் கல்வியும் கலையும் செழித்து ஒங்கும் துன்னாலையில் தம்பி ஐயா வாத்தியார் அம்மணிப்பிள்ளை தம்பதியினரின் இல்லறம் நல்லறமாக அமைய நவரத்தினசிங்கம், அழகரத்தினம், மகேஸ்வரி, ஞானப் பூங்கோதை, சின்னமணி எனும் ஐவரைப் பிள்ளைகளாகப் பெற்று எடுத்தனர்.

இவர்களுள் மற்றைய நால்வரும் முன்னரே அமரத்துவம் அடைந்து விட்டனர்.

மூன்றாவது பிள்ளையான மகேஸ்வரி 1930 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நான்காம் திகதி பிறந்தார். தன்னுடைய கல்வியினை துன்னாலை மெ. மி. த.க பாடசாலையில் கற்றார். சிறுபராயம் முதலே குடும்பத்தில் பாசம் மிக்கவராக எல்லோரோடும் அன்பாய் பழகி வந்தார். தன்னுடைய இருபதாவது வயதிலே துன்னாலை தாமு மீனாட்சிப்பிள்ளை தம்பதி களின் கனிஷ்ட புத்திரன் சின்னத் தம்பி அவர்களை இல்லாளாக 1950 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி ஏற்றுக்கொண்டார்.

இவர்களின் இனிய இல்லறத்தின் பேறாக ரஞ்சினி, ரகுநாதன், ரஞ்சன், பாஸ்கரன், சாந்தினி எனும் ஐந்து பிள்ளைகள் கிடைத் தனர். பிள்ளைகளைச் சிறப்பாகக் கற்க வைத்து நற்பண்பு மிக்கவர் களாக வளர்த்தெடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த மகளான ரஞ்சினி துன்னாலையைச் சேர்ந்த செல்லையா, தங்கம்மா தம்பதிகளின் நான்காவது பிள்ளையான பாலகிருஷ்ணனை திருமணம் செய்து சுகந்தி, சுதர்சன், சுமணன், சுதர்சினி ஆகிய பிள்ளைகளோடும் மருமக்கள், பேரப்பிள்ளைகளோடும் மகிழ்வாக வாழ்ந்து வருகின்றார்.

மூத்த புதல்வனான ரகுநாதன் பொலிகண்டியைச் சேர்ந்த சிவபாத சுந்தரம், ஜெகதீஸ்வரி தம்பதிகளின் மூத்த புத்திரியான தயாநிதியை மாங்கல்யதாரணம் செய்து பிரியதர்சினி, ஜனார்த்தனி, நவீனா ஆகிய பிள்ளைகளோடும் மருமகளோடும் கனடாவில் சந்தோசமாக வாழ்ந்து வருகின்றார்.

இரண்டாவது புத்திரனான ரஞ்சன் புலோலி சாரையடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை, பாக்கியம் தம்பதிகளின் இரண்டாவது பிள்ளையான பாலமுருகாம்பிகையை (அம்பிகா) மணம் முடித்து கனடாவில் களிப்பாக வாழ்ந்து வருகின்றார்.

இளைய புத்திரனான பாஸ்கரன் துன்னாலையைச் சேர்ந்த செல்லத்தம்பி, செல்வராஜேஸ்வரி தம்பதிகளின் மூத்த புத்திரியான சுமதியைக் கரம் பிடித்து தரணியா, தனுஷா ஆகிய பிள்ளைகளோடு கனடாவில் செழிப்பாக வாழ்ந்து வருகின்றார்.

இளைய புத்திரியான சாந்தினி எழுதுமட்டுவாளைச் சேர்ந்த சிற்றம்பலம், செல்லம்மா தம்பதிகளின் மூன்றாவது பிள்ளையான ஜெயச்சந்திரனை மணாளனாகக் கொண்டு குணாளன், கஜீவன் எனும் பிள்ளைகளோடு ஊரிலே வளம் மிக வாழ்த்து வருகின்றார்.

இவ்வாறு தன்னினிய பிள்ளைகளை கணவனின் அன்பான அரவணைப்போடும், உழைப்போடும் வளர்த்து கல்வியிலே உயர வைத்து இல்லறத்திலும் நிமிர வைத்து மகிழ்ந்தவர்.

வெளிநாட்டுக்குச் சென்றால் பிள்ளைகள் தாய் நாடு திரும்புவது அபூர்வமாக இருக்கின்ற இக்காலத்தில் மூன்று ஆண்பிள்ளைகளும் அடிக்கடி வந்து உறவாடி மகிழ்கின்ற பேறு பெற்றவர். தன்னினிய இரண்டு பெண் பிள்ளைகளும் அருகிருந்து பார்க்கின்ற அருமை கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னினிய பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள், உறவினர்கள், சுற்றத்தார், அயலவர் என அனைவ ரோடும் அன்பாகவும் பண்பாகவும் பழகியவர்.

2006ஆம் ஆண்டு ஆருயிர் கணவனை இழந்த நிலையிலும் எல்லோரதும் இனிய அரவணைப்போடு சிறப்பாக வாழ்ந்தவர் மகேஸ்வரி.

செல்லமாக தங்கம் என்று அழைப்பதைப் போன்றே பண்பிலே தங்கமாகத் திகழ்ந்தவர் மகேஸ்வரி. தன்னுடைய குடும்பம், உறவு என்பவற்றுக்கு அப்பால் ஆலயத் திருப்பணிகள், திருவிழாக் களிலும் மிகவும் ஈடுபாட்டுடன் பணி செய்து மகிழ்ந்தவர்.

இறுதிக் காலத்திலே ஒன்றரை வருடங்கள் நோய் வாயுற்று படுக்கையிலே இருந்தார். எல்லோரும் சூழ்ந்து நின்று சிறப்பாகக் கவனித்தனர். இறுதி நாட்களிலே தனதருமைப் பிள்ளைகள் ஐந்து பேர், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவுகள், சுற்றத்தார், அயலவர் என அனைவரும் சூழ்ந்திருக்க 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் நாள் அதாவது துர்முகி வருடம் மார்கழித் திங்கள் தேய்பிறை ஸப்தமி திதியில் இவ்வுலக வாழ்வினை நீத்து இறைபதம் அடைந்தார்.

**சிவ சிவ என்றிட சிவ கதியாமே!**

- தேவையற்ற வேலைகள் எங்களைக் களைப்படையச்செய்கின்றன. தேவையான வேலைகள் எங்களுக்கு மகிழ்வைத் தருகின்றன.
- ஆரோக்கியமாகவும், சந்தோஷமாகவும் இருப்பவர்களின் உள்ளம் களைப்படைவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பிரதம குரு ச. க. புருஷோத்தமக்குருக்களின் பிரார்த்தனை உரை

அன்பிற்கு இலக்கணமாகவும் அயலவர்கட்கு உதவியாகவும் வாழ்ந்தவர். இந்திரன் அம்மன் 7ஆம் திருவிழாவை மிகவும் சிறப்புடன் நடாத்தி வந்தவர். அவரின் மறைவு கேட்டு துயரடைந்தோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். மாயவரின் திருவடியடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வல்லிபுராலயம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

ச. க. புருஷோத்தமகுரு

◈ *எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் அப்பொருளின் உண்மை நுணுகி உணர்வதே அறிவாகும்.*

*- திருவள்ளுவர் -*

◈ *வையகத்தில் இல்லற இயல்புடன் சிறந்து வாழ்பவன் கடவுள் தன்மையில் வைத்து மதிக்கப்படுவான்.*

*- திருவள்ளுவர் -*

◈ *எத்தனை குழப்பம் நேர்ந்தாலும் பொய்மை மறைந்து விடும் மெய்மை மேலே உயர்ந்து நிற்கும்.*

*- காந்தியடிகள் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்வான உத்தமி

எம் மண்ணிலே வாழ்ந்த சின்னத்தம்பி மகேஸ்வரி என்பவர் தன் உயர்வால் வாழ்வில் முன்னுதாரணமாக எம் மத்தியிலே வாழ்ந்தவர். தன் ஆரம்ப வாழ்வு கொஞ்சம் கஷ்டமான சூழ்நிலையில் இருந்தாலும் விவசாயத்தை நம்பி தன் கணவரான அமரர் சின்னத்தம்பியும் அவரும் அயராத விவசாயத்தை மேற்கொண்டு தங்கள் பிள்ளைகளின் வளர்ச்சிப்பணியை சிறப்பாக மேற்கொண்டார்கள்.

படிப்படியாக வாழ்வில் முன்னேற்றம் அடைந்த இவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் அவர்களது முன்னேற்றத்திலும் தங்களை அர்ப்பணித்து செயற்பட்டவர்கள். ஒரு தந்தையைவிட தாயானவள் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு அதிக அக்கறை காட்டுவதுண்டு. அந்தப் பணியில் அமரர் மகேஸ்வரி அவர்கள் எம் மத்தியிலே முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர். அன்பான உபசரிப்பும் அமைதியான சுபாவமும் கொண்ட அமரர் தம் வாழ்நாள் முழுவதும் தம்முடைய இனம், சுற்றம், சூழல், அயல் போன்றவர்களுடன் சுமுகமான வாழ்வை மேற்கொண்டவர்.

தன்னம்பிக்கையாலும் முயற்சியாலும் தம் வாழ்வை மேம்படுத்தி உயர்வான உத்தமியாக வாழ்ந்த சின்னத்தம்பி மகேஸ்வரி அவர்களின் நினைவுகள் எம் மத்தியில் என்றும் அழியாது, அன்னாருடைய ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதம் பிரார்த்திப்போமாக.

சிவஸ்ரீ ராம் சபாநாதக்குருக்கள்
சாரதாபீடம்

- *வெற்றி என்பது அமைதியான மனத்திலிருந்து துளிர்விடுவது. சூடான இரும்பை வெட்டி வளைக்கக் கூடிய குளிரான இரும்பே அமைதி.*
- *அதிக விடயங்களை நீங்கள் ஊகிக்க முனையும் போது, உங்கள் அக அமைதி அகன்று போகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மிந்திரன் கண்ணகை அம்பாள் ஆலய தர்மகர்த்தா அவர்களின் இரங்கற்செய்தி

எமது ஆலயத்தின் சிறப்பான திருவிழாவான 7 ஆம் திருவிழா உபயகாரரான சின்னத்தம்பி மகேஸ்வரி அவர்களின் இழப்பு எமது கிராமத்திற்கு ஓர் இழப்பு எனலாம். திருவிழா உபயகாரர் மட்டுமல்ல நவராத்திரி, திருவெம்பாவை, பிள்ளையார் கதை, குங்கும அர்ச்சனை போன்ற உபயங்களும் அவர்களுக்குண்டு. எமது கிராமத்தில் 7 ஆம் திருவிழா தங்கம் என்றால் தெரியாதவர் யாருமிலர். எமது ஆலயத்திற்கு பல திருப்பணிகள் பல உதவிகள் செய்துள்ளார். அது மட்டுமல்ல எமது குடும்பத் திற்கும் பல உதவிகள் செய்துள்ளார். எமது ஆலயம் மட்டுமல்ல அயலிலுள்ள ஆலயங்களிலும் தாளாத பக்திகொண்டவர். அன்னாரின் இழப்பு குடும்பத்தினரை மிகவும் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஸ்ரீ மிந்திரன் அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

சி. இந்திரராஜாக்குருக்கள்
ஸ்ரீமிந்திரன் அம்பாள் கோவில்.
துன்னாலை.

## பொன் மொழிகள்

*முள் நிறைந்த செடியிலேதான் முழு அழகு வாய்ந்த ரோஜா மலர் பூக்கிறது. அது போலவே சொல்லொணாத் துன்பங்கட் கிடையிலேதான் உண்மை பூத்து மலர்கிறது.*

- **காந்தியடிகள்**

*மனத்தைச் செல்வழி விடாமல், தீமையிலிருந்து அகற்றி நன்மையான வற்றில் செலலிடுவதே அறிவு*

- **திருவள்ளுவர்** -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை ஓர் ஆலயம்

அன்னை ஓர் ஆலயமென்றே
அன்பைச் சொரிந்த அன்னை
என்றும் அறிவாற்றல் பண்பு
எதற்கும் அஞ்சிடாத் துணிவு
தனக்கெனத் தோன்றிய உண்மை
தகைமையாய் எடுத்துரைப்பார்
எனக்கென எதுவும் சேரா
எண்ணமே கொண்ட அன்னை
உதவிகள் ஓடிச் செய்வார்
உபசாரம் அவரின் மூச்சாம்
எது இடர் துன்பச் சுமை
எவருக்கும் வையேன் என்று
தானே தன் முடிவை யேற்றார்
தாங்காத நோயும் தொல்லை
தேனாய்ப் பிள்ளைகள் பல
திருவிளக்கென ஒளிர்ந்தார்
போனாவே போகுமிடம் தேடி
இந்திரம்மனை
அனுதினம் வேண்டும் பக்தை
தீக்கிரையான தெல்லாம்
தெய்வத்தின் அழைப்பினாலே
சின்னத்தம்பி மகேஸ்வரித் தெய்வம்
சேர்ந்த நல்இறை பதமே
என்றும் அவர் ஆத்மா சாந்தி
எய்திடல் வேண்டும் என்போம்.

"உதயகிரி"
வடகோவை, கோப்பாய்.

துன்னையூர்
பிரம்மஸ்ரீ அ. பிறேமச்சந்திரக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பாக்கள்

## மூத்தமகள் ரஞ்சினி புலம்பல்

அம்மா என்றழைத் துங்கள் அருகிருந்து
அரவணைப்பில் வாழ்கின்ற பேறு பெற்றேன்
தம்மாலே இயன்றதிது என்ற தன்மை
தரணியிலே நீகடந்து நின்றாய் அம்மா
உம்மாலே நாமுயர்ந்தோம் பாசம் கண்டோம்
உனதருகில் இருக்கின்ற வாய்ப்பும் தந்தாய்
எம்தாயே தந்தையையும் பிரிந் திருக்க
எமைவிட்டு தொலைதூரம் சென்ற தென்ன.

## மூத்தமகன் ரகுநாதன் புலம்பல்

தந்தையொடு வாழ்வினிலே சேர்ந் துழைத்து
தரணியிலே நாமுயர மூலம் ஆனாய்
சிந்தையிலே பிள்ளைகளே சிறப்பு என்ற
சீர்மியத்தில் எமையெல்லாம் இணைத்து நின்றாய்
அந்தமே இல்லாத அன்பைக் கொட்டி
ஆசையாய் மூத்தவனென் றழைத்து நின்றாய்
எந்தவப் பேறே இறுதியில் இருந்தேன்
எப்படித் தேறுவேன் மூலத்தை இழந்து.

## இளையமகன் ரஞ்சன் புலம்பல்

வேலையைத் தேடிவெளி நாடு சென்றாலும்
வேண்டிய வாறருகினிலே வந்தேன் அம்மா
சாலவுந்தன் பாசமதில் நனைந்தே நாங்கள்
சகந்தனிலே உயர்வுகளைக் கண்டோம் அம்மா
காலனுனை பறிக்கின்ற வேளை கூட
கண்ணிமைக் காதருகிருக்க கனிவு தந்தாய்
மூலமென முழுவதுமாய் நின்ற தாயே
முடியவில்லை நின்னிழப்பைத் தாங்க எம்மால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிமகன் பாஸ்கரன் புலம்பல்

வளம்மிகவே வாழ்க்கையிலே வாழ என்று
வழிசொல்லி மேன்மைகளைப் பெற்றுத் தந்தாய்
உளம்பொங்கப் பாசமதை உயர்வாய் தந்து
உன்னத நல்செல்நெறியில் போக வைத்தாய்
உளம் என்று நாமிருந்தோம் உரிமை பொங்க
உத்தமியே கதறுகிறோம் பிரிவு தன்னால்
வளம் இன்று சென்றதுவோ அருகில் நின்று
வகையறிந்த கடனாலே தேறு கின்றேன்.

## இளைய மகள் சாந்தினி புலம்பல்

ஐவருள்ளும் இளையவள் நான் என்பதாலோ
அக்கறையாய் இறுதிவரை பார்த்து நின்றாய்
மெய்வருத்தம் பாராதுன் உழைப்பைத் தந்து
மேதினியில் நாமுயர மேன்மை செய்தாய்
செய்தவமோ என்றெண்ணி அருகில் நின்று
சிறப்புக்கள் செய்கின்ற வலிமை தந்தாய்
தெய்வஅருள் ஆசியெனத் தெளிந்து நின்றேன்
திக்கற்று இன்றுநான் புலம்பு கின்றேன்.

## மருமகன் ஜெயச்சந்திரன் புலம்பல்

பண்புநிறை மகளினை துணையாய் தந்து
பண்பட்ட வாழ்வினுக்கு அணியாய் நின்றீர்
கண்ணிமை போல் குடும்பத்தைக் கனிவாய் காத்து
காத்திரமாய் ஒத்தாசை புரிந்து நின்றீர்
எண்ணியவா றருகினிலே இருந்து நாங்கள்
எம்கடனைச் செய்கின்ற பேறு பெற்றோம்
புண்ணியமே பேரருடன் பிள்ளை எல்லாம்
புலம்பிடவே வெகுதூரம் சென்ற தென்ன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகள்மார் தயாநிதி, பாலமுருகாம்பிகை (அம்பிகா), சுமதி புலம்பல்

பிள்ளைகளை இப்படித்தான் வளர்த்தல் என்ற
 பெருமையுறு வகையினிலே வளர்த்து எங்கள்
கள்ளமிலா இல்லறத்திற் கொளியைத் தந்த
 கண்ணியநல் மாமியரே விரைந்த தென்ன
பிள்ளைகளும் நாங்களும் பேரர் தாமும்
 பிறநாட்டில் இருந்தாலும் பிரியாப் பாசம்
உள்ளவரை கொட்டிநின்றீர் இருவர் நாங்கள்
 உன்னடிக்கு எட்டாத பாவி ஆனோம்.

## மருமக்கள் புலம்பல்

மருமக்கள் எமைக்கண்டால் மகிழ்வு கொண்டு
 மகிழ்கின்ற மாமியரே சென்ற தெங்கே
வருகின்ற துன்பத்தை வகையாய் ஓட்டி
 வழிசொல்லி ஆறுதலைத் தந்து நின்றீர்
திருவென்று பலவாறு நாங்கள் போற்ற
 தெய்வமென ஆசிமழை பொழிந்தீர் மாமி
உருகுகின்ற மனமின்று கதறி நிற்க
 உத்தமியே உனையிழந்து வாடு கின்றோம்.

## உடன்பிறவாச் சகோதரர்கள் புலம்பல்

பிறப்பாலே சோதரராய் வந்தார் போலே
 பிரியாது அன்புவழி நடந்து நின்றீர்
திறத்தாலே எம்மோடு ஒன்றி நின்று
 சுகதுக்கம் எல்லாமே பரிந்து சென்றீர்
வரத்தாலே நாமெல்லாம் இணைந்தோம் என்ன
 வல்லமைகள் பலசெய்த வசந்தம் நீயே
இறப்பாலே புலம்புகிறோம் நாங்கள் இங்கே
 இணைபிரியா சோதரியுன் இழப்புத் தன்னால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனன்மார், மைத்துனிமார் புலம்பல்

எத்தனையோ துன்பங்கள் வந்த போதும்
எம்மோடு ஒன்றித்து இருந்த மச்சாள்
முத்தெனவே பாசமழை பொழிந்து எங்கள்
முதசொமென இறுதிவரை திகழ்ந்த மச்சாள்
மைத்துனன்மார் மைத்துனிமார் மனம் உவக்க
மச்சாள் நீ செய்ததுதான் மறக்க லாமோ
எத்தனை நாள் சென்றாலும் தீராது உந்தன்
எளியமுகம் எமைவிட்டு சென்ற தாலே.

## பெறாமக்கள் புலம்பல்

பெற்றால்தான் பிள்ளையென்ற வரம்பு தாண்டி
பெறாநல் மக்களென உரிமை கொண்டே
உற்றதாய் போலிருந்து உண்மை ஓங்க
உவப்போடு செய்தவைதான் மறக்க லாமோ
பற்றுறுதி கொண்டவராய் பாசம் பொங்க
பக்குவமாய் எமையணுகி பரிவு செய்தீர்
உற்றவளே உன்பிரிவு வாட்டி நிற்க
உருக்குலைந்து கதறுகிறோம் நாங்கள் இங்கே.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

**சுகந்தி, சுதர்சன், சுமணன், சுதர்சினி,**
**பிரியதர்சினி, ஜனார்த்தனி, நவீனா, தரணியா, தனுஷா,**
**குணாளன், சஜீவன்**

தன்னினிய பிள்ளைகளின் தனயர் என்றே
தக்கபடி உரிமைகளைச் செலுத்தி நின்றீர்
பொன்னனைய ஒளிவீசும் பொலிவு தன்னால்
பேரரெமைப் பாசத்தால் பூட்டி வென்றீர்
என்னருமை அம்மம்மா அப்பம்மா என்று
ஏற்றமுடன் நாமுரைக்கும் வேளை எல்லாம்
நன்நெறியாய் எம்மையெலாம் இணைத்து நின்ற
நாயகியே வெகுதூரம் சென்ற தென்ன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

பேரரெமை எப்போதும் கண்டால் போதும்
  பெருமையுடன் புன்னகையை பொழிந்து நிற்பீர்
ஊரருமை உவப்போடு பேசி நின்று
  ஒளிதந்து நாயகமாய் நிலைத்து நின்றீர்
சீரருமை பொங்கிடவே சிறப்புச் செய்து
  சிந்தனையில் நல்வழியை காட்டி நின்றீர்
பேரரின்று பிதற்றுகிறோம் கண்ணீர் மல்கி
  பிரியமுறு உறவேயுன் இழப்பு தன்னால்

## பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

### சஞ்சயன், கன்சிகா

பூட்டம்மா என்றுங்கள் அருகில் வந்து
  பிரியமுடன் ஆசிபெறும் பேறு பெற்றோம்
பூட்டருக்கு இனிப்பென்று பலவும் நல்க
  பேரார்வத்தோடு அதை உண்டு நிற்போம்
வாட்டுதம்மா உந்தனுயர் நினைவு இன்று
  வகைதெரியா பிரியமுறு பாசம் இன்றி
மீட்டுகிறோம் பூட்டம்மா நினைவு தன்னை
  மீளமுடியாத பெரும் இழப்பு தன்னால்

## உறவினர், அயலவர்கள் புலம்பல்

உறவென்றால் இதுவென்று சொல்லும் வண்ணம்
  உவப்பாக எம்மோடு இணைந்து நின்றீர்
மறவாது சுகதுக்கம் பலதில் எல்லாம்
  மனதோடு ஒன்றித்து சேர்ந்து நின்றீர்
பிறழாத பாசத்தால் அயலவர் தம்மேல்
  பிரியாத நட்பதனை கொண்டு நீவிர்
மறவாத தங்கமென மனமும் சோர
  மண்டியிட்டு புலம்புகிறோம் நாங்கள் இங்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

எண்பத்தாறு ஆண்டு காலம் இங்கே
ஏற்றமுடன் சைவத்தமிழ் வாழ்வு வாழ்ந்தே
பண்பட்ட வாழ்வென்று பலரும் போற்ற
பக்குவமாய் அறநெறிகள் செய்து நின்றார்
மண்ணதிலே நாளைக்கு இதுதான் என்று
மதிநுட்பம் கொண்டு யார் கூற வல்லார்
புண்ணியமே பலசெய்து நின்ற தங்கம்
பூரணன்தாள் இருப்பாள் நாம் தேறுவோமே.

## பெரு"மை"க்குத் தேவையானவை

1) உயிர்போக நேர்ந்தாலும் நீ பேச வேண்டியது
- உண்**மை** -

2) மற்றவருடன் பேசும்போது உன்னில் கலந்திருக்க வேண்டியது
- இனி**மை** -

3) வெற்றிபெற என்றும் நீ ஒழுக வேண்டியது
- ஒற்று**மை** -

4) கனவிலும் நனவிலும் நீ செய்ய வேண்டியது
- நன்**மை** -

5) உறுதியான வாழ்விற்கு என்றும் உன்னிடம் இருக்க வேண்டியது
- எளி**மை** -

6) இறுதிமூச்சு உள்ளவரை நீ மீறாது இருக்க வேண்டியது
- கட**மை** -

7) வெற்றிக்கும் உயர்ச்சிக்கும் உன்னிடம் இருக்க வேண்டியது
- வல்ல**மை** -

8) உன்னையே நீ சிந்தித்தறிய அடிக்கடி பெறவேண்டியது
- தனி**மை** -

9) காலமெல்லாம் சிறப்புடன் வாழ நீ அணிய வேண்டியது
- பொறு**மை** -

10) இவ்வாறு நீ ஒழுகிவிட்டால் நாளை நீ பெறுவது
- பெரு**மை** -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ச் செல்வம்

"செல்வம் இரு வகைப்படும். அவை முறையே கல்விச் செல்வம், பொருட் செல்வம் எனப்படும்" என அறிந்திருக்கிறோம். ஆனால், இன்று ஒரு புதிய செல்வத்தைப் பற்றி ஆராய்வோம்.

செல்வம் பலவகைப்படும். அவை முறையே மனை, மனைவி, மக்கள், தாய், நெல், நீர், நிலம், கால்நடை, கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், வலிமை, பொன், பொருள், போகம் எனப் பதினாறு வகைப்படும் எனக் கூறலாம்.

'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டும்' எனப் பெரியோர்கள் வாழ்த்தக் கேட்டிருக்கிறோம் அல்லவா? அது பதினாறு பிள்ளைகளைப் பெறுவது என்பதல்ல என்றும், மேற்கண்ட பதினாறு செல்வங்களைப் பெறுவதே என்றும், நமக்கு நன்கு விளங்குகின்றது. ஆம்! அவை அனைத்தும் ஒவ்வொரு மனிதனும் பெறவேண்டிய பெரும் பேறுகளாகிய செல்வங்களேயாம். இச் செல்வங்களில் ஒன்று குறையினும், நமது வாழ்வு சிறக்காது என்று நன்கு தெரிகிறது.

இப் பதினாறு செல்வங்களுள் தாயும் ஒரு செல்வமாகும். தாயைப் பலர் தெரிந்திருப்பர். ஆனால், தாயார்? தாய் + யார்? என அறிந்திருப்பவர் மிகச் சிலரே எனத் துணிந்து கூறலாம்.

எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது தாய்ச் செல்வமாகும். பிற செல்வங்களை இழந்து விடுவோமானால், முயன்றால் அவற்றைத் திரும்பப் பெற்றுவிடலாம். தாய்ச் செல்வத்தை இழந்துவிட்டால், அதை எவராலும் எவ்விதத்தும் திரும்பப் பெறமுடியாது. இழந்தது இழந்ததுதான். அச் செல்வம் இருந்த இடத்தை நிரப்பவோ, ஈடுசெய்யவோ எக்காலத்திலும் இயலாத அவ்வளவு உயர்ந்த செல்வமாகும் அது. ஆகவே, செல்வங்களனைத்திலும் தலையாய செல்வம் ஆதலின், அதனைச் "தாய்ச் செல்வம்" எனவும் கருதலாம்.

'பட்சம், பாசம், பக்தி, கடாட்சம், கிருபை' என வடமொழியாளர் கூறுவதும், 'அன்பு, இரக்கம், பற்று, காதல், கண்ணோட்டம்' எனத் தமிழ் மொழியாளர் கூறுவதும், மக்கள் மனம் இளகி நிற்கும் நிகழ்ச்சி ஒன்றையே குறிக்கும். இச் சொற்கள் இடவேறுபாடு, மன வேறுபாடு ஆகியவைகளுக்குத் தக்கவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாளப்பெறும். என்றாலும், தாய் தன் பிள்ளையிடத்து காட்டுகின்ற அன்பே தலையாய அன்பாகும். இதனையே அறிஞர்கள் 'தாயன்பு' எனக் குறிப்பிட்டுக் கூறுவர்.

சிறந்த துறவிகளில் இருவர் துறந்தும் துறவாதவர். ஒருவர் இளங்கோவடிகள்; மற்றொருவர் பட்டினத்தடிகள். இளங் கோவடிகளால் நாட்டை, முடியை, நல்வாழ்வை. பொன்னை, மணியை, பூவணையை, பட்டத்தை, பல்லக்கை, பட்டுடையைத் துறக்க முடிந்தது. ஆனால் அவரால் தமிழைத் துறக்கச் சிறிதும் முடியவில்லை. அவரது துறவாத தமிழ்ப் பற்றிற்குச் சிலப்பதிகாரம் இன்றும் சான்று கூறிக் கொண்டிருக்கிறது.

பட்டினத்தடிகளும் அவ்வாறே. அனைத்தும் துறக்க முடிந்தும், துறந்தும், தாய்ச் செல்வத்தைத் துறக்க அவரால் முடியவே இல்லை.

"குடியிருந்த வீட்டுக்குக் கொள்ளியை வைக்க."
"வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பலாகுதே."
"அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு."
"பூமானே என்றழைத்த வாய்க்கு."
"எப் பிறப்பிற் காண்பேன் இனி?"

என்ற அவரது சொற்கள், முற்றும் துறந்தும், தாயைத் துறவாத அம் முனிவரின் மன நெகிழ்ச்சியை நமக்கு நன்கு அறிவிக்கின்றன.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்."

என்பது ஔவையின் வாக்கு மனிதன் தன் கண்முன்னே முன்னதாக அறியப்படுகின்ற கடவுள் தாயேயாம் என்பதை இது நன்கு விளக்குகிறது.

தெய்வம் மட்டுமல்ல; கோயிலும் கூடத்தான் என்பதை, தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்பதால் நன்கு அறியலாம். பெற்ற தாயைப் புறக்கணித்து விட்டு, புண்ணியம் கருதிக் கோயில் குளங்களுக்குச் சென்று வருவது பயனற்றது என்பது கருத்து. தன் பிள்ளைக்காகப் பரிந்து பேசுபவர் தாயைவிட வேறு எவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் இல்லை என்பது முடிந்த முடிபாகும். இதனை அறிந்துதான் மணிவாசகர் இறைவனைக் குறித்து வேண்டும் பொழுது, "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" என வேண்டியிருக்கின்றார். இதிலிருந்து தாயைவிட அதிகமாகப் பரிவு காட்டுகிறவர்கள் தெய்வங்கள் தாம் என்பதும், மக்களில் எவரும் இல்லை என்பதும் விளங்கலாம்.

எத்தகைய துன்பம் வந்தாலும், சான்றோர்கள் பழிக்கின்ற தீயசெயல்களை ஒரு போதும் செய்யலாகாது என்பது, தமிழ் மக்களின் பண்புகளில் ஒன்று. பெற்ற தாயின் பசியைக் கண்ணால் கண்டு துடிக்கும் மகன்கூட, தவறான வழியில் பொருளைத்தேடித் தன் தாயின் பசியைப் போக்கலாகாது என்பது தமிழரின் நெறி. இதனைக் கூறவந்த பேரறிஞர் திருவள்ளுவர்,

"ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

என அறுதியிட்டுக் கூறிவிட்டார். இதிலிருந்து, மக்கள் படுகின்ற துன்பங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்தது தாயின் பசியைக் காண்பது தான் என்பதும், பெற்ற வயிறு பசிக்கக் காண்பது பிறந்த மகனுக்குப் பெரிய இழிவு என்பதும் நன்கு விளங்குகின்றது. தாயை, யார் என நன்கு அறிவிக்க, வள்ளுவர் மற்றொரு குறளையும் கூறியிருக்கிறார். அது,

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி".

என்பது தாயின் தன்மை எக்குற்றத்தையும் பொறுக்கும் இயல்பு டையதாம். பிள்ளையை வெறுக்கும் குணம் (தந்தைக்கு வந்தாலும்) தாய்க்கு வாராதாம். தன் பிள்ளையைத் திருடன் என்று கூறக்கேட்டாலும் நம்பாளாம். 'திருட்டுப் பிள்ளைகளோடு சேர்ந்து போயிருப்பான்' என்றே எண்ணுவாளாம். விலைமாதர் வீட்டுக்குச் சென்றான் எனக் கேட்டாலும் நம்பாளாம் 'தெருவிலுள்ள பிற பிள்ளைகள் அவனைத் தவறான வழியில் அழைத்துச் சென்றிருப்பர்; விரைவில் திருந்திவிடுவான்' என்றே எண்ணுவாளாம். கொலைக்காரன் எனக் கூறக் கேட்டாலும் ஒப்பாளாம். 'ஆத்திரத்தால் நேர்ந்திருக்குமோ' என ஐயப்பட்டு, 'அவனை விட்டுவிடுங்கள்' எனப் படபடத்துத் தன் மகனை உயிரோடு திரும்பப்பெற ஓடியாடி அலைந்து உருக்குலைவாளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பெற்ற மகன் சூதாடுவதற்குத்தான் பொருள் கேட்கிறான் என்பதைத் தாய் அறிவாளாம். என்றாலும், புத்திசொல்லி சில தடவை தந்தாலும், ஒரு தடவை மறுப்பாளாம். தர மறுத்த தாயை மகன் கன்னத்தில் அடிப்பானாம். அடிபட்ட தாயின் வாய் இரத்தம் கசிய, 'பாவிப் பயலே! ஏண்டா என்னை அடிக்கிறாய்?' எனக் கூறுமாம். ஆனால், அவளுடைய உள்ளமோ "தான் பெற்ற மகனுக்கு எவ்வளவு வலு இருக்கிறது?" என எண்ணி மகிழுமாம். இத்தகைய தாய்கூட தன் மகன் குடித்து வெறித்திருக்கிறான் எனக் கண்டால், வெட்கிப் போய் முகஞ்சுளித்து வெறுத்து விடுவாளாம். 'பெற்ற தாய் முகத்தும்கூடக் குடி வெறுக்கப்படுமானால், சான்றோர் முகத்தின் முன்னே அது என்னாகும்?' என்பதே வள்ளுவரின் கேள்வியாகும். இதிலிருந்து, ஒரு சிறு குற்றம் செய்தாலும் வெறுப்பவர் சான்றோர் என்பதும், எக் குற்றம் செய்தாலும் பொறுப்பவள் தாய் என்பதும் நன்கு விளங்குகிறது. பெற்ற தாயின் பெருமையை, அவள் தன் உள்ளக் கிடக்கையை நன்கு விளக்க வள்ளுவர் கையாண்ட இம்முறை வியக்கத் தகுந்ததும், மகிழ்ச்சிக்குரியதுமாகும்.

இராவ்பகதூர் ப.சம்பந்த முதலியார் அவர்கள், "மனோகரன்" என ஒரு நாடகத்தை எழுதியிருக்கிறார். அந்த நாடகத்தின் உயிரோட்டமெல்லாம் ஒன்றே ஒன்று தான், அது,

"**தன்னைப் பழித்தவன் தந்தையா யிருந்தாலும் விடாதே!**
"**ஆனால், தாய் தடுத்தால் விட்டுவிடு!" என்பதேயாம்.**

தாய்ச் செல்வத்தின் பெருமையை அந் நாடகம் மக்களுக்கு நன்கு அறிவிக்கிறது. அக் கதையை எழுதுவதற்கென்றே பிறந்தவர் சம்பந்த முதலியார் என்பதும், மனோகரனாக நடிப்பதற்காகவே பிறந்தவர்கள் டி. கே. சண்முகமும், கே. ஆர். இராமசாமியும் என்பதும், அந் நாடகத்தைப் பார்த்து மகிழ்வதற்காகவே பிறந்த வர்கள் நம் போன்றவர்கள் என்பதும், அந்த நாடகத்தைப் பார்த்துத் திருந்துவதற்காகப் பிறந்தவர்கள் பெற்ற தாயைப் புறக்கணிக்கும் மக்கள் என்பதும் நமது கருத்து.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஒரு கவிதை புனைந்திருக்கிறார். அக் கவிதை மனோகரன் கதையை ஒருபடி அதிகமாகத் தாண்டியிருக்கிறது. அது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தன்னைப் பழித்தவனைத் தாய் தடுத்தால் விட்டுவிடு
தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடாதே!"

என்பதாகும். இவ்வுறுதிமொழியை ஒவ்வொரு தமிழனும் கூற வேண்டுமென்பது நமது விருப்பம். கவிஞர், "தாய் தடுத்தால்" எனக் கூறுவதிலிருந்து, ஒரு வீர மகனைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் எத்தகைய வீரனுக்கும் இல்லையென்பதும், பெற்ற தாய் ஒருத்திக்கே உண்டு என்பதும் நன்கு புலப்படும். தாய்ச் செல்வத்தின் பெருமையைப் புலவர் இச் சொற்களைக் கொண்டு கூறாமல் கூறியிருப்பது அறிந்து மகிழத்தக்கது.

தாயின் சொற்களைத் தட்டிவிட்டால், பின்பற்றி நடப்பதற்குப் பிற சொற்கள் இல்லையென்பது ஓர் அறிஞரின் முடிவு. இதை அவர், "தாய் சொல் துறந்தால் வாசகமில்லை" என்ற சொற்களால் கூறிவிட்டார். பிறர் கூறுகின்ற புத்திமதிகளில் ஒருகால் வஞ்சகம் கலந்திருந்தாலும். இருக்கலாம்; ஆனால், தாயின் சொற்களில் இது அடியோடு இராது என்பது அவரது கருத்து.

இறைவிக்கும் இறைவனுக்கும் உவமையாகக் கூறப் பக்திமான்களுக்குக் கிடைத்த உவமைகள் கூட, தாயும் தந்தையும் தான் எனத் தெரிகிறது. இவ்வுண்மையை "அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!" என்ற மணிவாசகரின் திருவாசகம் நமக்கு விளக்கும். 'அம்மையே! ஒப்பிலா மணியே!' என்ற சொற்களில் தாயையும் இறைவியையும் ஒன்றாகச் சேர்த்துக் கூறி, இவர்கள் ஒப்பிலா மணிகள் என வியந்து கூறியிருப்பது உய்த்துணரத் தக்கது.

தன் குழந்தை , 'அம்மா!' என்று அழைப்பதைக் கேட்ட தாயின் உள்ளம் எவ்வளவு குளிர்ச்சியடைகின்றது? என்பதைக் குழந்தைகளைப் பெறாத பெண்கள் எவ்வாறு அறிவார்கள்? அவர்கள் அறியவும் முடியாது; அவர்களுக்கு அறிவிக்கவும் இயலாது. தான் பெற்ற பிள்ளை மட்டுமா? பிறர், "அம்மா!" என்றழைப்பதைக் கேட்டுவிட்டால், பெண்மக்களின் உள்ளம் இளகியே போய்விடும். இதனை அறிந்தே,பிச்சை எடுப்பவர் அனைவரும், இச் சொல்லையே துணையெனக்கொண்டு வாழ்கின்றனர் போலும்! அம்மா என்பது எவ்வளவு இனிமை கலந்த சொல்? இந்த நல்ல தமிழ்ச் சொல்லையே உலகிலுள்ள எல்லா நாட்டினரும், மொழியினரும் பெற்ற தாய்க்கு இட்டு அழைக்கின்றனர். அம்மா என்பதில் பின் எழுத்தும், தாயே என்பதில் முன் எழுத்தும் சேர்ந்தே வடமொழியில் "மாதா"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிற்று. ஆங்கிலத்திலும் "மதர்" ஆயிற்று. மனிதன் தமிழ்ச் சொற்களைச் சிதைத்துக் கூறினாலும், ஆடு, மாடுகள் சிறிதும் சிதைக்காமல் நல்ல தமிழை அப்படியே வைத்து, "அம்மா" என்றே அழைத்து வருகின்றன. இச் சொல்லைக் கேட்ட தாய் மனம் இளகி எதையும் தந்துவிடுகிறாள். என்னே தாயின் உள்ளக் கனிவு!

பல ஊர்களில் பல கழகங்கள் நிறுவப் பெற்றிருக்கும், அவைகள் அனைத்தும் கிளைக் கழகங்கள் என்றே பெயர் பெறும். ஆனால், அவைகளைத் தன்னுள் அடக்கி, தாங்கி உயர்ந்து நிற்கும் கழகமோ, "தாய்க் கழகம்" என்ற பெயரைப் பெறும். இப் பெயரும் தாயின் பெருமையை நமக்கு நன்கு அறிவிக்கின்றது.

இது காறும் கூறியவைகளைக் கொண்டு, தாயும் ஒரு செல்வம் என்பதும், அதன் மதிப்பு மிகவும் உயர்ந்தது என்பதும் ஒருவாறு விளங்கியிருக்கலாம்.

தம்பி! உனக்குத் தாய் உண்டா? இருந்தால் விடாதே! உன் தாய் உயிரோடு இன்றிருந்தால், நீ ஒரு சிறந்த செல்வத்தைப் பெற்றிருக்கிறாய் என்று கருது, இன்றோ, நாளையோ, இன்னும் சில ஆண்டுகளிலோ, அச் செல்வம் உன்னைவிட்டுப் பிரிந்துவிடும். பிறகு அச் செல்வத்தைத் திரும்பத் தேட உன்னால் முடியுமா? என்று நினைத்துப் பார். அதனை இப்போதே நன்கு பயன்படுத்திக்கொள். வாயாரப் போற்றி, கையார அள்ளிக் கொடு! மனத்தை மகிழச் செய்! வயிற்றைக் குளிரச் செய்!

வாழுங் காலத்தில் வயிறு எரியச் செய்து மாண்ட பிறகு மனம் புழுங்கி அழும் மக்களும் உண்டு. அவர்களைக் கண்டால், அவர் களுக்காக இரங்கு! தன்னைப் பெற்ற தாய் கிண்ணிப் பிச்சை யெடுக்க, கும்பகோணத்தில் கோதானம் கொடுக்கும் பிள்ளை களும் உண்டு, அவர்களைக் கண்டால் வெறுத்து ஒதுக்கு! தாயின் வயிற்றைப் "பற்றி எரிய"ச் செய்யாதே! அவ் வயிற்றைப் பசிக்கவும் விடாதே! ஏனெனில், நீ இருந்த இடம் அது அல்லவா? ஆகவே, தாயைப் போற்று! அது உனது கடமை!

தம்பி! இன்னும் ஒன்று. தாய் என்ற சொல் நம்மைப் பெற்றோர்களுக்கு மட்டும் வைக்கின்ற ஒரு சொல் என்று எண்ணிவிடாதே. நம்மைப் பெற்ற நாட்டிற்கும் 'தாய் நாடு' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர். நம்மை வளர்த்த மொழிக்கும் 'தாய்மொழி' எனப் பெயர். தமிழ் மக்களாகிய நமக்குத் தமிழ் நாடும், தமிழ் மொழியுமே தாய் நாடும் தமிழ் மொழியுமாகும். இவைகளும் நமது தாய்ச் செல்வங்களே யாம். தாயை இழந்த பிள்ளைகள் சில காலம் தப்பிப் பிழைத்து உயிர் வாழ முடியும். ஆனால், தாய் நாட்டை இழந்து தாய்மொழியை இழந்துபோன மக்கள் எக்காலத்தும் வாழ இயலாது. ஒரு கால் வாழ்ந்தாலும், அவ்வாழ்வு வாழ்வாக இராது.

தம்பி! முடிவாகக் கூறுகிறேன். உனக்கு என்று ஒரு தாய் இருந்தால், அவளைப் போற்றி வாழ், இன்றேல், தாயை இழந்து திக்கற்றுத் தெருவில் நிற்கும் பிள்ளைகளைப் பார்த்தேனும் திருந்து.

உனக்கென்று ஒரு மொழி இருந்தால், அதனை வளர்த்து வாழ்! இன்றேல், தன் மொழியை இறந்துபடச் செய்து பிற மொழிகளைக் கலந்து குளறிப்பேசி வாழும் மக்களைப் பார்த்தேனும் திருந்து.

உனக்கென்று ஒரு நாடு இருந்தால், அந் நாட்டைக் காப்பாற்றி வாழ்! இன்றேல், நாடற்று நாடோடிகளாய்த் திரியும் மக்களைப் பார்த்தேனும் திருந்து!

இவை மூன்றும் உனது தாய்ச் செல்வங்களாகும். இவைகள் வாழ்ந்தாலன்றி உனக்கு வாழ்வில்லை. இம் மூன்றும் உன்னைப் பெற்றவைகள். ஆனால், அவைகள் உன்னைப் பெற்றதினால் பெற்ற பயன் என்ன? என்பதை எண்ணிப் பார்! எண்ணிப் பார்க்க வேண்டியது உனது கடமை. எண்ணு! துணி!! செய்!!!

**வாழட்டும் தாய்ச் செல்வங்கள்!**

## சிந்தனைத்துளி

நீ எந்த அளவிற்கு இறைவனை நாடுகின்றாயோ அந்த அளவிற்கு உன் பலவீனங்கள் உன்னை விட்டு நீங்கிப் போகும். நீ செய்ய வேண்டியதை முழுமனதோடு செய்துவிட்டுப் பயனை இறைவனிடம் விட்டுவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை



அபிராமிப்பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

### கள்ளவாரணப் பிள்ளையார் காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத் (து )உமைமைந்த னேஉல (கு) ஏழும்பெற்ற
சீரபி ராமிஅந் தாதிஎப் போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

### நூல்

**நல்வித்தையும் ஞானமும் பெற**

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழித்துணையே !

**தெய்வத்துணை**

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங் கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ (து)அறிந்தனமே.

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறந்தே விழும்நர குக்குற வாய மனிதரையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயர் பதவிகள் அடைய**

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே.

**மனக்கவலை தீர**

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும்புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே.

**மந்திர சித்தி பெற**

சென்னியதுஉன் பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றும்உன் றன்பர மாகம பத்ததியே.

**மலையென வரும் துன்பம் பனியென நீங்க**

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடி யாய்! சிந்துரானன சுந்தரியே.

**நல்லறம் சிறக்கத் துறவறம்**

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரருள் உண்டாக**

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின் பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம் மேவந்தென் முன் நிற்கவே.

**மோட்ச சாதனம் பெற**

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளே அருளே! உமையே! இமயத்(து)
அன்றும் பிறந்தவளே! அழி யாமுத்தி ஆனந்தமே.

**இல்வாழ்க்கை இன்பம் பெற**

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடி(வு) உடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணார விந்தத் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம் எம்பி ரான்முடிக் கண்ணியதே.

**நெஞ்சம் தியானத்தில் நிலைபேறு அடைய**

கண்ணிய(து) உன்புகழ் கற்ப(து) உன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏ(து) என் அம் மேபுவி ஏழையும் பூத்தவளே.

**வைராக்கிய நிலை எய்த**

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளே பின் கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமை பெற**

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில் உன்னைச்
சந்திப் பவர்க்(கு) எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே.

**பெருஞ்செல்வமும் பேரின்பமும் பெற**

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார் மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ?
பண்ணளிக் கும்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே.

**முக்காலமும் உணரும் ஆற்றல் உண்டாக**

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்க ளாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவள விற்(கு) அள வான(து) அதிசயமே.

**கன்னிகைகளுக்கு நல்ல வரன் கிடைக்க**

அதிசய மான வடி(வு) உடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி துணைஇரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே?

**பயம் நீங்க**

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள்திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரின்பம் உண்டாக**

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

**வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக**

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே.

**அம்பிகைக்குச் செய்த தீமை நீங்க**

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள் உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே.

**பிறவிப் பிணி தீர**

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்(து) இங்(கு) இனிப்பிற வாமல்வந்(து)
ஆண்டுகொள்ளே.

**மனச்சஞ்சலம் உண்டாகாதிருக்க**

கொள்ளேன் மனத்தில்நின் கோலம் அல் லா(து)
அன்பர்கூட்டம்தன்னை
விளம்பு விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு)
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீராத நோய் தீர**

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

**நினைத்த காரியம் இடையூறின்றி ஈடேற**

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான்மற வாமல்நின்(று) ஏத்துவனே.

**சொல்வன்மையும் செல்வாக்கும் பெருக**

ஏத்தும் அடியவர் ஈரே ழுலகினை யும்படைத்தும்
காத்தும் அளித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கேமணம் நாறும் நின்தாள் இணைக்(கு)
என் நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே.

**அருட்புனல் பரவ**

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத் (து) அழுக்கைஎல் லாம் நின்
அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே.

**இகபர சுகங்களைப் பெற**

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அணிமாதி சித்திகளைப் பெற**

சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

**அடுத்தடுத்துவரும் துன்பம் நீங்க**

அன்றே தடுத்(து) என்னை ஆண்டுகொண் டாய்கொண்ட(து)
அல்லவென்கை
நன்றே உனக்(கு)இனிநான் என் செயினும் நடுக்கடலுள்
சென்றே வீழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேஎன் உமையவளே.

**மறுமையில் இன்பம் உண்டாக**

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்(கு)
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமயங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே.

**ஆட்கொள்ள**

ஆசைக்கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்பட இருந் தேனைநின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே.

**அம்பிகையின் நினைவு அகலாதிருக்க**

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்(து) அஞ்சல் என் பாய் அத்தர் சித்தம்
எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழு(து) உன்னையே அன்னையே என்பன்
ஓடிவந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடியாருக்கு வேண்டுவன பெற**

வந்தே சரணம் புகும் அடி யாருக்கு வான் உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

**கடின மணம் திகழ**

திங்கட் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங்கக் கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே.

**தொல்வினைகள் போக**

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம்செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்(து)
இருளேதும் இன்றி ஒளிவெளி யாகி இருக்கும் உன்றன்
அருளே(து) அறிகின்றிலேன் அம்புயா தனத்(து) அம்பிகையே.

**நவரத்தினம் அடையும் நல்லூழ் பெற**

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே.

**வேண்டிய பொருளை வேண்டிய படியே அடைய**

பவளக்கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி பெற**

ஆளுகைக்(கு) உன்றன் அடித்தாமரைகள் உண்(டு);
அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்றன் விழியின் கடையுண்டு; மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறை யேஅன்று; முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில் லான் பங்கில் வாள்நுதலே.

**பூர்வ புண்ணியம் தடையின்றிப் பயன்தர**

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்(கு) அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணம் அன்றோ? முன்செய்

**அடியார் உறவு பெற**

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே.

**உலகம் நமக்கு உதவ**

இடங்கொண்டு விம்மி இணைகொண்(டு) இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்(டு) இறைவர்
வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே.

**தீமையெல்லாம் நீங்க**

பரிபுரச் சீறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்(து) இருந்தவளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறை வியும் ஆம்
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு
செய்தே.

**உலக அபவாதம் நீங்க**

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய்தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே.

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான் உன்னை
வாழ்த்துவனே.

**யோக சித்திபெற**

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடு வே கிடந்து சுடர்கின்றதே.

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ?
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப் போது வளைக்கை அமைத்(து)
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்(து) அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே.

**அம்பிகையை நேரில் தரிசிக்க**

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்
றாயகி யாதி உடையாள் சரணம் அரண் நமக்கே.

**வையக வாழ்வில் சிறக்க**

அரணம் பொருள் என்று அருள் ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன்(று) அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய் தார் இந்த வையகத்தே.

**இம்மையில் பெருஞ்செல்வம் உண்டாக**

வையம் துரகம் மதகரி மாமகு டம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள் அடித் தாமரைக்(கு) அன்புமுன்பு
செய்யும் தவம்உடை யார்க்குள வாகிய சின்னங்களே.

**தவம் சிறக்க**

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்ய பட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும் கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடன் தொல்லைகள் தீர**

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பாற்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

**விருப்பு வெறுப்பற்ற மோனநிலை எய்த**

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
அன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா(து) ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றிலையே.

**யாவரையும் ஈர்க்கும் ஆற்றல் உண்டாக**

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்(து) இவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற்பாள் என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப் பொருள் அறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே.

**வறுமை நிலை ஒழிய**

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்(டு) அண்டம் எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மெய்யருளே.

**இறையுணர்வால் மன அமைதி பெற**

அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும் அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிள்ளை நல்லவனாக**

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்(கு) அலர் ஆகநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யார் அடி யார்பெற்ற பாலரையே.

**மெய்யுணர்வு தோன்ற**

பாலினும் சொல் இனி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்க நின் றோன்கொன்றைவார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே.

**மாயை அகன்று உண்மை உணர்வு உண்டாக**

நாயேனை யும் இங்(கு) ஒரு பொரு ளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கைச்சியே.

**எத்தகைய அச்சமும் அகல**

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் அலரும் எப் போதும் என் சிந்தையதே.

**நல்லறிவு உண்டாக**

என்சிந்தை தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றில் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பக்தி பெருக**

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்(கு) அன்பு பூண்டுகொண்டேன்நின்
புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழுதும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே.

**மகப்பேறு உண்டாக**

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனும்முந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே.

**கவி பாடும் ஆற்றல் பெற**

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிசெம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே.

தோத்திரம் செய்து தொழுமின் போலும்நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

**நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக**

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி யூறொளி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகல சௌபாக்கியங்களும் உண்டாக**

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

**இசை, ஒவியம் முதலிய கலைகளில் வல்லமை பெற**

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமுமாகி மதங்கர் குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

**மனக்குறை தீர்ந்து மகிழ்ச்சி பெருக**

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பணி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழிவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக்(கு) என்குறையே.

**பிறவிப்பிணி தீர**

என்குறை தீரநின்(று) ஏத்துகின் றேன் இனி யான்பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

**பெண்களுக்குக் கர்ப்பம் உண்டாக**

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வைரவர் ஏத்தும் பொழு(து) எமக்கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு) ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய் தொழில் தலைமை எய்த**

*நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்*
*அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்*
*பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்*
*சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.*

**விதியையும் வெல்ல**

*தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயரின்றி*
*மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்*
*பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்*
*கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே.*

**தனக்குரிய பொருள் தப்பாமல் வந்துசேர**

*குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து*
*மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி*
*வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்*
*பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பைரவியே.*

**பகைவர்களால் உண்டாகும் அச்சம் நீங்க**

*பைரவி பஞ்சமி பாசாங் குசபஞ்ச பாணிவஞ்சர்*
*உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா*
*வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே*
*செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள்செப்புவரே.*

**சகல போக சௌபாக்கியங்களும் உண்டாக**

*செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்*
*அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்*
*கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்*
*துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிக்கே அருளுண்(டு) அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு)அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.

**நிலையான மன மகிழ்ச்சி உண்டாக**

கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.

**நன்னடத்தை உண்டாக**

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் என(து) உனது என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றி லேன்என் கண்நீவைத்த பேரளியே.

**கவன சக்தி பெருக**

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுந்தொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ங னேமறப் பேன்நின் விரகினையே.

**ஏவலர் பலர் உளராக**

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்க மலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே.

**இக்கட்டான நிலைகள் நீங்க**

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடையாய என்னை இனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்லல் எல்லாம் அற**

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் கும்முலை யும்முலை மேல்முத்து மாலையுமே.

**அச்சம் நீங்க**

மாலயன் தேட மறைதேட வானவர் தேட நின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பனிமொழியே.

**செயற் கரிய செயல்களைச் செய்து புகழ்பெற**

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே.

**அம்பிகையின் அருள் எப்போதும் கிடைக்க**

பரமென்று உனையடைந் தேன்தமி யேனும்உன் பக்தருக்குள்
தரமன்று இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே.

**யோக சித்தி பெற**

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போ(டு) உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே.

**தம்பதிகள் மனம் ஒன்றி மகிழ்ந்திட**

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனி எனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசாங்க காரியங்களில் வெற்றி உண்டாக**

மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம்தருமே.

**மனப்பக்குவம் உண்டாக**

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன் அவர் போனவழியும் செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.

**உள்ளத்தே உண்மை ஒளி உண்டாக**

நகையே இகிதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

**விரும்பித் தொழுது உயர**

விரும்பித் தொழும் அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால் அபி ராமி சமயம்நன்றே.

**தூய மனநிலை பெற**

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவ(து)
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்(று) அழித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே.

**எங்கும் தலைமையும் புகழும் பெற**

கோமள வல்லியை அல்லியந் தாமரைக்கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புகழும் தர்மமும் வளர**

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

**வஞ்சகர் செயலால் வருத்தம் உண்டாகாதிருக்க**

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறி யாமடப் பூங்குயிலே.

**அருள் தன்மை வளர**

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்(கு) அன்று இமவான் அளித்த கனங்குழையே.

**அம்பிகையின் திருவுருவை மனத்தில் எப்போதும் காண**

குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்எப் போதும்
உதிக்கின்றவே.

**நூற் பயன்**

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழு வார்க்(கு) ஒரு
தீங்கில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசார அனுட்டானங்கள்

ஆசார அனுட்டானங்கள் ஒரு மனிதனின் வாழ்வில் நிறைந்த பூரணத்துவம் கொடுப்பதாகும். சூரிய உதயத்தின் முன் நித்திரை விட்டெழுந்து, காலைக் கடன்கள் முடித்து, தண்ணீரை சிவ தீர்த்தமாகப் பாவித்து ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து, ஜெபம் தியானம் போன்றவை குறைந்தது 5 நிமிடமேனும் செய்து, இயலுமாயின் ஆலயதரிசனம் செய்து சுத்தமான வாழை இலையில் உட்கொள்வது உத்தமமாகும். பிரதி நாட்கள் தோறும் இம்முறையைக் கைக்கொள்வது உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஆன்ம பலம் தரும், மனம் தூய்மை அடையும்.

இது காலை, மாலை, மதியம் என மூன்று வேளைகளிலும் செய்வது மிகவும் உத்தமம். காலையில் சூரிய உதயத்தின் போதும், மதியம் நடுப் பொழுதின் போதும், மாலையில் சூரிய அஸ்த மனத்தின் போதும், நித்திய அனுட்டானம் செய்து, சிவனைத் தியானிப்பது மிகவும் நன்மை பயக்கும். தனியான சுத்தமான இடத்தில் அமர்ந்து திருநீற்றை தீட்சையின் போது கூறிக் கொடுத்த மந்திர உச்சாடனத்துடன் குழைத்து நெற்றி மார்பு, நாடி, கை, கால், புயம், இடுப்பு போன்ற இடங்களில் பூசி அதற்குரிய தியான மந்திரங் களை ஜெபிப்பது அநுட்டான முறை. தீ - கொடுத்தல், சை - கெடுத்தல், அதாவது ஞானத்தைக் கொடுத்து மலத்தை கெடுத்தல். தீச்சுடர் போல் பிரகாசமான ஞான அறிவைப் புகட்டி மந்தமாக மனதில் படிந்திருக்கும் மலங்களை நீக்கி விடுதலே தீட்சை. இது மூவகைப்படும். இதில் ஏழு வகையான முறைகளை சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவை நயன தீட்சை, பரிசதீட்சை, வாசகதீட்சை, மானசதீட்சை, சாத்திர தீட்சை, யோகதீட்சை, ஔத்திரதீட்சை எனப்படும். முறையே கண்களால் அருட்பார்வையினாலும் பரிசம் தொடுவதாலும், உபதேசத்தாலும், அருள்நோக்கினாலும் ஒரு மாணாக்கனைப் பரிசுத்த ஆத்மீக ஞானவாதியாக குருவால் ஆக்குவதே இத் தீட்சை. தீட்சை என்பது இறைவன் குருவிடமாக நின்று ஞானத்தைக் கொடுத்து பாசத்தை கெடுக்கும் கிரியை என்ற கருத்துள்ள தீஷா என்ற வட சொல்லிலிருந்தே வந்தது.

சி. ஸ்ரீ இந்திரராஜாக்குருக்கள்,
மிந்திரன் அம்மன் கோயில்,
துன்னாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலிகள்



மண் மகிழ 04 . 03 . 1930

கண் நெகிழ 20 . 12 . 2016

துன்னாலை, மிந்திரன் அம்பாள் கோவிலடியைச் சேர்ந்த

## அமரர்
## சின்னத்தம்பி மகேஸ்வரி

அவர்களின் பிரிவில் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆறுதல்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல துன்னையூர், மிந்திரன் அம்பாளுடைய பாதக்கமலங்களை வேண்டுகின்றோம்.

**அன்போடு பழகி**
**ஆறுதல்கள் பலசொல்லி**
**உத்தமற்கு இலக்கணமாய்**
**எம்மண்ணில் வாழ்ந்து - இன்று**
**உறவுகள் கதறியழ எங்குற்றீர்?**
**உந்தன் திருமுகம் காண ஏங்குகின்ற**
**உறவுகட்கு என் சொல்வோம்?**
**என் செய்வோம்**
**எம் வாழ்வின் நியதி இது**
**அஞ்சலித்தோம்**
**அமைதிகொள்ளும்**
**துன்னையூர்**
**மிந்திரன் அம்பாள் பாதமதில்.**

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

*துன்னாலை*
*கரவெட்டி*

*சிவஸ்ரீ சி.இந்திரராஜாகுருக்கள் குடும்பத்தினர்*
*ஸ்ரீ மிந்திரன் அம்பாள் ஆலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை அம்மாவே.....

மண்

மகிழ

04 . 03 . 1930



கண்

நெகிழ

20 . 12 . 2016

## அமரர் சின்னத்தம்பி மகேஸ்வரி

ஆசையம்மா என்றுவுயர் பேரைப் போன்றே
அனைவரையும் ஆசையினால் இணைத்து நன்றே
நேசமுடன் நீநடந்த பாங்கு இன்று
நீரலையை விழிகளிலே தோற்று தம்மா
வாசமலர் என்றிடவே சட்டம்பி தம்பிப்பிள்ளை
அம்மணிப் பிள்ளைக்கு மகளாய் வந்தாய்
ஓசையுறு சின்னத்தம்பி இனியனை மணந்தே
ஒப்பில்லா இல்லறத்தில் பெருமை சேர்த்தாய்

ஐந்துபிள்ளை தனைப் பெற்று வளர்த்தே
அவருயர்வில் மெழுகாக உருகி நின்றாய்
சிந்தையிலே பிள்ளை பேரர் பீட்டர்
சிறப்பான சுற்றம் உறவு எல்லாம்
பந்தமுயர் பேறென எண்ணி வாழ்ந்தாய்
பாரினிலே சிவ வாழ்வு பேணி நின்றாய்
எந்தாயே எமை விட்டு நீங்கிச் செல்ல
ஏதும் அறியாமல் நாம் வாடுகின்றோம்

தாய்ப்பாசம் எதுவென்று தரணி தன்னில்
தகையாக சொல்லி நீ தந்தாய் அம்மா
தாய்வாசல் இதுவென்று உணர்ந்து நாங்கள்
தரணியில் நிமிர்ந்திட மூலம் ஆனாய்
தாயுந்தன் அருகிருக்க இறுதி தன்னில்
தக்கபடி பிள்ளைகட்கு பேறும் தந்தாய்
வாய்பதைக்க சொல்லிழுக்க பதறுகின்றோம்
வல்லமைசேர் அம்மாவுன் இழப்பு தன்னால்

**துன்னாலை**
**கரவெட்டி**

**உங்களை இழந்து தவிக்கும்**
**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்துகொள்ளுங்கள்

- பூமிக்கும் சந்திரனுக்கும் இடையில் உள்ள தூரம் 3.86 இலட்சம் கிலோ மீற்றர்
- பூமியின் புறப் பரப்பளவு 51 கோடியே 1 இலட்சத்து 500 சதுர கிலோமீற்றர்
- நிலப்பரப்பளவு 14 கோடியே 89 இலட்சத்து 50 ஆயிரத்து 800 சதுர கிலோமீற்றர்
- நீர்ப்பரப்பளவு 36 கோடியே 11 இலட்சத்து 49 ஆயிரத்து 700 துர கிலோமீற்றர்.
- நில நடுக்கோட்டின் சுற்றளவு 40 ஆயிரத்து 67 கிலோமீற்றர்
- சூரியனில் இருந்து உள்ள தூரம் 14 கோடியே 94 இலட்சத்து 7 ஆயிரம் கிலோமீற்றர்
- சூரியன் தன்னச்சில் ஒரு முறை சுழல்வதற்கு ஆகும் காலம் 23 மணித்தியாலம் 56 நிமிடம் 4.09 நொடிகள்
- சூரியனை ஒரு முறை சுற்றிவர எடுக்கும் காலம் 365 நாட்கள் 5 மணித்தியாலம் 48 நிமிடங்கள்
- பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் 156 கோடி கிலோமீற்றர்.
- தென் துருவத்தை விட வடதுருவம் 2799 அ தாழ்ந்துள்ளது
- பென்சிலின் மருந்தைக் கண்டு பிடித்தவர் அலெக்ஸாண்டர் பிளமிங்
- தமிழனாக சாக விரும்பிய ஆங்கிலேயர் ஜி.யு.போப்
- வெடிமருந்தைக் கண்டு பிடித்தவர் ஆல்பிரட் நோபல்
- உலகில் பெண்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சியளிக்கும் நாடு இஸ்ரேல்
- குறைந்த நாடுகளைக் கொண்ட கண்டம் அவுஸ்திரேலியா
- ஆகக் குறைந்த சனத்தொகை கொண்ட நாடு வத்திக்கான்
- புகழ்பெற்ற பிரான்சின் கோபுரம். ஈகிள் கோபுரம் 1056 அடி உயரமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்...



எமது குடும்பத்தின் மூலமாக விளங்கி இறையடி எய்திய எமது அன்புத் தெய்வம் **திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி (தங்கம்)** அவர்களின் பேரிழப்பால் துயருற்ற வேளையில் உற்றதுணையாய் நின்று உதவிகள் பலபுரிந்தும், இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றி நேரடியாக ஆறுதல் கூறியும், தொலைபேசி, கடிதங்கள் ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்தும் பல்வேறு வகைகளில் உதவியும், ஒத்துழைப்பும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், யாவருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை உரைகளை வழங்கிய குருமாருக்கும், கிரியைகளை நடாத்திய அந்தணர்களுக்கும் மற்றும் அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனை என்பவற்றில் கலந்து கொண்டு சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் எம் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நன்றி**

இந்திரம்மன் கோவிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்ச

* தாமு + * மீனாட்சிப்பிள்

* கந்தையா
\+
* பொன்னம்மா

* சுப்பிரமணியம்
\+
* தங்கமுத்து

* தங்கம்மா
\+
* செல்லையா

* செல்லம்மா
\+
* கணபதிப்பிள்ளை

* தம்பி ஐயா + * அம்மணிப்பிள்ளை

* நவரத்தினசிங்கம்
\+
* சரசுவதி

* அழகரத்தினம்
\+
* சின்னத்துரை

**மகேஸ்வரி**
**(தங்கம்)**

* ஞானப்பூங்கோதை
\+
* தணிகாசலம்

ரஞ்சினி
\+
* பாலகிருஷ்ணன்

சுகந்தி + சிவகுமார்
சுதர்சன் + பிரியதர்சினி
சுமணன்
சுதர்சினி

சஞ்சயன்
கன்சிகா

ரகுநாதன்
\+
தயாநிதி

பிரியதர்சினி + சுதர்சன்
ஜனார்த்தனி
நவீனா

பால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்சம்

ட்சிப்பிள்ளை

ம்மா

பிள்ளை

* சின்னம்மா
+
* விநாசித்தம்பி

* ஆறுமுகம்
+
இராசம்மா

* சின்னத்தம்பி

ாதை

* சின்னமணி

ம்

ரஞ்சன்
+
பாலமுருகாம்பிகை
(அம்பிகா)

சன்

பாஸ்கரன்
+
சுமதி

தரணியா
தனுஷா

சாந்தினி
+
ஜெயச்சந்திரன்

குணாளன்
கஜீவன்

* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னை

பத்து மாதம் சுமந்தெம்மை
பாரில் தந்த அன்னையவள்
வித்து வாழ்வின் வேரன்றோ
வேண்டி அவளைப் பணிவோமே

பிள்ளை எம்மேல் பாசமதாய்
பெரிதும் அன்பைக் கொட்டி நிதம்
உள்ளம் தன்னில் உரமூட்டும்
உயர்ந்த வலிமை அவளன்றோ

கருவில் திருவைக் கொண்டே நாம்
களிப்பாய் வாழ்வில் உயர்ந்திடவே
உருவில் உவப்பில் கடவுளென
உண்மைத் தெய்வம் அவளன்றோ

கள்ளம் கபடம் அறியாமல்
கண்ணீர் தன்னை உணராமல்
உள்ளத் தனைய உயர்வென்ற
உள்ளம் அதுவும் தாயன்றோ.

- பரா. ரமேஸ்

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org